**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**முன்னிலை:– திருமதி.R.தமிழரசி, B.A.,B.L.,**
**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, குளித்தலை,**
**2026 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.No.06/2026 In O.S.No.01/2024**

1. காமாட்சி
2. நாராயணன் ... மனுதாரர்கள்/வாதிகள்

**//எதிராக//**

ஆங்கரை ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு என் முன்பாக 11.02.2026 ஆம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.O.சிவக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பிலும் எடுத்துரைத்த வாதங்களை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.

**உத்தரவு**

அ.வ.எண்.01/2024 மற்றும் அ.வ.எண்.97/2024 ஆகிய இரண்டு வழக்குகளையும் ஒன்றிணைத்து விசாரிக்க வேண்டுமென அனுமதி கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்**

1) மனுதாரர் இவ்வழக்கின் 2 ம் வாதி. இவ்வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதி அ.வ.எண்.97/2024 என்ற வழக்கை விளம்புகை மற்றும் செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளார். இரண்டு வழக்குகளில் தரப்பினர்கள் ஒருவரே ஆவார். வழக்கு சொத்துக்களும் ஒரே புல எண்ணில் அடங்கியுள்ளது என்பதால் இரண்டு வழக்குகளும் ஒன்றிணைத்து விசாரிக்க வேண்டுமென அனுமதி கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

2) அ.வ.எண்.01/2024 வழக்கு புல எண்.147/15 க்கு உட்பட்டது. அ.வ.எண்.97/2024 வழக்கு புல எண்.147/22 க்கு உட்பட்டது ஆகும்.

இரு வழக்குகளிலும் தரப்பினர்கள் மட்டுமே ஒன்றாகும். சொத்துக்கள் வெவ்வேறானவை. கோரியுள்ள பரிகாரங்கள் வெவ்வேறானவை. எனவே இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல. தள்ளுபடி செய்யத்தக்கதாகும்.

3) தற்போது தீர்மானம் செய்யப்பட வேண்டியது இம்மனு அனுமதிக்கப்படத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு**

4) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. மனுதாரர்கள் தரப்பில் இவ்வழக்கிலும், அ.வ.எண்.97/2024 வழக்கிலும் தரப்பினர்கள் ஒருவரே என்றும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஒன்று என்றும் எனவே இரு வழக்குகளையும் ஒன்றாக விசாரிக்க வேண்டுமென வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் சொத்து விபரம் வெவ்வேறானது என்பதால் மேற்படி மனுவிற்கு ஆட்சேபணை செய்யப்பட்டது.

5) வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்கையில், இரண்டு வழக்குகளிலும் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சனை ஒன்றாகவே உள்ளது. மேலும் தரப்பினர்கள் இருவரும் ஒன்றே ஆவார். எனவே இரு வழக்குகளையும் ஒன்றாக நடத்துவதால் நீதிமன்றத்தின் கால நேரம் சேமிக்கப்படும் என்பதாலும் இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித இழப்பும் ஏற்படாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**இறுதியாக**

இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R TAMILARASI

Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>**

–இல்லை–

R TAMILARASI Digitally signed by R TAMILARASI

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**குளித்தலை.**

************************************

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
குளித்தலை

I.A.No. 06/2026
in
O.S.No. 01/2024

DRAFT / FAIR ORDER

D.D.13.02.2026
************************************